

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.8.2023) திருவாரூர் மாவட்டம், காட்டூரில் உள்ள கலைஞர் கோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.8.2023) காட்டூரில் இருந்து திருவாரூர் வரும் வழியில் கிருஷ்ணமூர்த்தி பேரன் மணமகன் ஹரிகிருஷ்ணன், மணமகள் அனிதா ஆகியோரை சந்தித்து வாழ்த்தினார்.



நாகப்பட்டினம் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு திருவாரூர் வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.8.2023) காட்டூரில் உள்ள கலைஞர் கோட்டத்தை பார்வையிட்ட பின் அப்பகுதியில் உள்ள சிறுவர், சிறுமியர் மற்றும் பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு திருவாரூர் மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.08.2023) காலை நடைப்பயிற்சி மேற்கொண்டார்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு திருவாரூர் மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.08.2023) காலை நடைப்பயிற்சி மேற்கொண்டு, பொதுமக்கள் மற்றும் சிறுவர்களுடன் கலந்துரையாடினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.08.2023) திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில், கடந்த 30.7.2023 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரிஸ்டோ இரயில்வே மேம்பாலத்தில் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது, சாலை விபத்து ஏற்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்த தலைமைக் காவலர் ஸ்ரீதர் அவர்களின் குடும்பத்தினருக்கு ரூபாய் 25 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையை வழங்கி ஆறுதல் கூறினார். உடன் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.பிரதீப் குமார். திருச்சிராப்பள்ளி மாநகர காவல் துறை ஆணையர் திருமதி என்.காமினி ஆகியோர் உள்ளனர்.

### தென்காசி மாவட்டத்தில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிக்கான இடம்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - வே.ஜெயபாலன் - ஈ.ராஜா ஆய்வு!

தென்காசி, ஆக.28-

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 05.09. 2023 செவ்வாய்க்கிழமை அன்று தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்கிறார்கள்.

அதனைத் தொடர்ந்து தென்காசி இசக்கி வித்யாஷ்ரம் பள்ளி வளாகத்தில் மதியம் 3 மணி அளவில் நடைபெறும், கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியிலும்,மாலை 5 மணி அளவில் இளைஞர் அணி நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள்.

இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரையில் இருந்து வருகிற செப்டம்பர் 4ம் தேதி மாலையில் புறப்பட்டு தென்காசி வருகை தருகிறார்கள்.

இதற்கான நிகழ்ச்சிகள் நடைபெறும் இடத்தை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம் குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு பணி மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் பொதுக் குழு உறுப்பினர் ரஹீம்,நகர செயலாளர்கள் சாதிர் (தென்காசி) வெங்கடேசன் (செங்கோட்டை) ஒன்றிய செயலாளர்கள் அழகுசுந்தரம், பெரியதுரை,மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி கிருஷ்ணராஜா, முகேஷ், வழக்கறிஞர் அணி வேலுச்சாமி, இலக்கிய அணி வளனரசு,அணி துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜ் சுப்பிரமணியன், முகமது அப்துல்ரஹீம்,

ஒன்றிய பொருளாளர் இசக்கி பாண்டியன் ஒன்றிய துணைச் செயலாளர் ஆனந்த் குற்றாலம் பேரூர் செயலாளர் குட்டி என்ற சங்கர் மாணவர் அணி ரமேஷ் சாம்பார் வடகரை மாறன் முன்னாள் மாவட்ட இளைஞர் அணி உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகளை தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் செய்து வருகின்றனர்.

# தமிழ்நாட்டில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஆக. 28 -

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வட தமிழக கடலோரப் பகுதிகளில் மேல் நிலவும் வளி மண்டல கிழடுக்கு சுழற்சி காரணமாக, இன்று தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.


மேலும் இன்று முதல் செப்.2ந்தேதி வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 3435 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 2526 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக் கூடும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ‘வாட்ஸ் அப்’பில் வந்த செய்தி!




# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; “ ஒரே நாடு, ஒரே உரம்” என்ற திட்டத்தைச் செயல்படுத்த, ஒன்றிய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம் முடிவு செய்து, சுற்றறிக்கை அனுப்பி இருக்கிறதாமே ?

**பெரியதம்பி :** **ஆமாம்; ஒரே நாடு, ஒரே மொழி - ஒரே நாடு, ஒரே மதம் - ஒரே நாடு, ஒரே கலாச்சாரம் - ஒரே நாடு, ஒரே ரேஷன் கார்டு - ஒரே நாடு, ஒரே அடையாள அட்டை - போன்றவற்றின் வரிசையில், இப்போது ‘ஒரே நாடு, ஒரே உரம்’ என்பதும் இடம் பெறுவது, ஒரே அல்லது ஒற்றை எண்ணத்தின் வெளிப்பாடு ஆகும்.**

**இந்தியா - ஓராயிரம் மலர்கள் மணம் வீசும் ஒரு நந்தவனம் - பல நாகரிகம், பண்பாடு மிளிரும் பன்முகம் கொண்ட நாடு - “முப்பது கோடி முகமுடையாள், உயிர் மொய்ம்புற வொன்றுடையாள், செப்புமொழி பதினெட்டுடையாள், எனில் சிந்தனை ஒன்றுடையாள்” என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடிய தேசம் - தெற்கும், வடக்கும், கிழக்கும், மேற்கும்; ஒரு புரிதலின் அடிப்படையில் ஒருங்கிணைந்து பயணம் மேற்கொண்டு வருகிறது பாரதத் திருநாடு.**

**இங்கே ஒரே, ஒரே - என்று பேசுவதும், செயல்படுவதும், சர்வாதிகாரத்தின் கோடு; ஜனநாயகத்திற்குக் கேடு !**

**ஒன்றிய பா.ஜ.க.வினரின் போக்கைப் பார்த்தால், ‘ஒரே’ என்பது எங்கே போய் முடியும் என்று தெரியவில்லை !**